6. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் தலைவர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பது மற்றும் இருபது (பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை) ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. உரிமை மீறல் பிரச்சினை

நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்மீது—தீர்ப்பு

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், 9-4-2002 அன்று, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, "1972-ல் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், காவிரிப் பிரச்சினை குறித்து, உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கைத் திரும்பப் பெற, இந்திரா காந்தி அம்மையாரிடம் தன் மீதுள்ள கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் ஆகிய இரு வழக்குகளையும், சர்க்காரியா கமிஷன் வழக்குகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பேரம் பேசி, காலில் விழுந்ததாக" தவறான தகவலை வேண்டுமென்றே கலைஞரின்மீது களங்கம் கற்பிக்கிற உள்நோக்கத்தோடு பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டு, அவர்மீது திருவாளர்கள் துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, இ. புகழேந்தி, எ.வ. வேலு, மீ.அ. வைதியலிங்கம், கு. பிச்சாண்டி, ஆர். சக்ரபாணி மற்றும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள், 15-4-2002 ஆம் நாளிட்டு அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

உறுப்பினர்களது உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பில், அமைச்சரின் உரையில் பிரச்சினைக்குரிய பகுதிகளைப் பேரவை விதி

2002 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

220-ன்படி இணைத்துத் தந்திருக்க வேண்டும். பிரச்சினைக்குரிய பகுதிகளை அறிவிப்புடன் இணைத்துத் தராதது, பேரவை விதி 220-க்கு முரணானது.

மேலும், இதுகுறித்து நிருபர்கள் பிரிவிலிருந்து அச்சிடப் பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த 9-4-2002 நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை நான் பார்வையிட்டேன். அதில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை முழுவதையும் படித்துப் பார்த்ததில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் தன் உரையில் கூறவில்லை. மாறாக, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மைய அரசு புலன் விசாரணையால் அவருக்கு ஏற்பட்ட அச்சத்தினால், உச்ச நீதிமன்றத்தில் இருந்த காவிரி நதி நீர் தொடர்பான வழக்கைத் திரும்பப் பெற்றுவிட்டார் என்ற பொருள்படத்தான் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிமீது வேண்டுமென்றே உண்மைக்கு மாறாக உள்நோக்கத்தோடு, களங்கம் கற்பிக்கும் வகையில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் பேசியுள்ளார் என்பதை ஏற்பதற்கில்லை.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்ற எனது தீர்ப்பினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. அறிவிப்புகள்

(அ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மீண்டும் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி மறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட திரண்ட இழப்பு குறித்த புள்ளிவிவரங்களில், அரசால் வெளியிடப்பட்ட நூலில் சில தவறுகள் உள்ளதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி ஆகியோர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.